# பத்திரிக்கை செய்தி

## மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை திட்டத்தில் பணி ஒதுக்க ரூ.1,000/- லஞ்சம் கேட்டு வாங்கிய பஞ்சாயத்து செயலாளர் கைது

புகார்தாரர் திருமதி,சந்தோசம், எண்.1/164, கந்தசாமி கோவில் அருகில், குத்தலாடம்பட்டி, ராசிபுரம், நாமக்கல் மாவட்டத்தில் வசித்து வருகிறார். புகார்தாரர் மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை திட்டத்தில் வரும் வாரத்தில் தனக்கு பணி ஒதுக்குமாறு திரு.தங்கதுரை, பஞ்சாயத்து செயலாளரிடம் கோரிக்கை விடுத்துள்ளார். திரு.தங்கதுரை, பஞ்சாயத்து செயலாளர், குட்லாடம்பட்டி பஞ்சாயத்து, அவர்கள் புகார்தாரருக்கு பணி ஒதுக்க வேண்டுமெனில் தனக்கு ரூ.1,000/-லஞ்சமாக கொடுக்க வேண்டும் என கேட்டுள்ளார், லஞ்சம் கொடுக்க விரும்பாத புகார்தாரர், நாமக்கல் மாவட்ட ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவில் அளித்த புகாரின் பேரில் இன்று 26.09.2024, பொறிவைப்பு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டது. மேற்படி பொறிவைப்பு நடவடிக்கையின் போது திரு.தங்கதுரை, பஞ்சாயத்து செயலாளர் அவர்கள் லஞ்ச பணம் ரூ.1,000/-யை புகார்தாரரிடமிருந்து பெற்றபோது ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்புத்துறை அலுவலர்களால் கைது செய்யப்பட்டார்.